# புதிர்கள்

உடலோ வெள்ளைநிறம், உள்ளமோ தங்கநிறம் - அது என்ன?
**விடை**:- முட்டை.

சிவப்பு தொட்டியில் மலரும் பூ, சிடுசிடுத்தால் மறையும் பூ - அது என்ன?
**விடை**:- சிரிப்பு.

என் உடம்பெல்லாம் முள், ஆனால் உள்ளமோ தேன்சுவை - நான் யார்?
**விடை**:- பலாப்பழம்.

மீன் பிடிக்க தெரியாது, ஆனால் வலை பின்னுவான் - அவன் யார்?
**விடை**:- சிலந்தி.

சுற்றிக்கொண்டே இருப்பேன், ஆனால் எனக்கு தலை வலிக்காது - நான் யார்?
**விடை**:- காற்றாடி.

இரவு ராணி அவள், தினமும் விழித்திருப்பாள் மாதம் ஒருமுறை உறங்கிடுவாள் - அவள் யார்?
**விடை**:- நிலா.

சட்டை மேல் சட்டையாய், பல சட்டை போட்டவன் சட்டைகளை கழற்றிப் பார்த்தால், உடம்பை மட்டும் காணோம் - அவன் யார்?
**விடை**:- வெங்காயம்.

வீட்டிற்குள் இருப்பான், உலகத்தை காட்டுவான் - அவன் யார்?
**விடை**:- கணினி, தொலைக்காட்சி.

சூரிய ஒளியில் உணவை சமைப்பேன், சுற்றுச்சூழலைப் பேணிக்காப்பேன் - நான் யார்?
**விடை**:- மரம்.

பல் துலக்க மாட்டான், ஆனால் இவன் பல் எப்பொழுதும் வெள்ளை - இவன் யார்?
**விடை**:- வெள்ளைப்பூண்டு.